**ஜனவரி – 09**

# TNPSC துளிகள்

- தென்னிந்திய புத்தக விற்பனையாளர்கள் மற்றும் வெளியீட்டாளர்கள் சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஜனவரி 04 முதல் 20 வரை நடைபெறும் சென்னை புத்தகக் கண்காட்சியின் 42-வது பதிப்பானது சென்னையின் நந்தனத்தில் உள்ள YMCA மைதானத்தில் தொடங்கியது.
- எகிப்து நாடானது அதன் தலைநகரான கெய்ரோவிலிருந்து 45 கி.மீ. தொலைவில் உள்ள புதிய நிர்வாக தலைநகரத்தில் மேற்கு ஆசியாவின் மிகப் பெரிய பேராலயத்தினை சமீபத்தில் திறந்துள்ளது.
- அடுத்த 5 ஆண்டுகளுக்குள் பொது உடைமைக் கோட்பாட்டுடன் இஸ்லாமியத்தை இணக்கமாக்கும் முயற்சியில் பீஜிங் ஆனது சீன மயமாக்க நடவடிக்கையை செயல்படுத்த புதிய சட்டத்தை இயற்றியுள்ளது.
- விமானப் போக்குவரத்துப் பாதுகாப்புத் தலைவர் மற்றும் மூத்த ஐபிஎஸ் அதிகாரியான ராஜேஷ் சந்திரா சாஸ்திரா சீமா பால் (SSB - Sashastra Seema Bal) என்பதன் பொது இயக்குநராக 2021 டிசம்பர் 31 வரை 2 ஆண்டு காலத்திற்கு நியமிக்கப்பட்டுள்ளார்.
    - இவர் இந்தோ - திபெத் எல்லைத் தலைவரான SS தேஸ்வாலுக்கு அடுத்ததாக பதவியேற்கிறார்.

# தமிழ்நாடு செய்திகள்

## அமைச்சர் பாலகிருஷ்ணா ரெட்டிக்குத் தண்டனை

- 1998 ஆம் ஆண்டு கற்கள் வீசி பேருந்துகளை சேதப்படுத்திய வழக்கில் அமைச்சர் பாலகிருஷ்ணா ரெட்டிக்கு 3 ஆண்டுகள் சிறைத் தண்டனை மற்றும் ரூ.10,000 அபராதம் விதித்து சிறப்பு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.
- இந்த தண்டனையைத் தொடர்ந்து இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சரான ரெட்டி தனது பதவி விலகலை அமைச்சரவையில் சமர்ப்பித்ததை அடுத்து அவரது பதவி விலகல் ஏற்றுக் கொள்ளப்பட்டது.
- மாநில சட்டசபையில் ஒசூர் சட்டமன்றத் தொகுதியின் பிரதிநிதியான ரெட்டி சிறப்பு நீதிமன்றத்தால் தண்டணையளிக்கப்பட்ட முதல் அமைச்சராவார்.
- இவர் பதவி வகித்து வந்த அமைச்சகமானது பள்ளிக் கல்வித் துறை அமைச்சரான K.A. செங்கோட்டையனுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

Under Section 8(3) of the RPA, a person convicted of any offence and sentenced to imprisonment for not less than 2 years shall be disqualified for that period and a further 6 years after release.

## தமிழ்நாட்டின் 33-வது மாவட்டம்

- ஜனவரி 08 ஆம் தேதி விழுப்புரம் மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து கள்ளக்குறிச்சியைப் புதிய மாவட்டமாக தமிழக முதல்வர் அறிவித்தார்.
- இது மாநிலத்தில் உள்ள பெரிய மாவட்டங்களில் ஒன்றாகும்.
- கள்ளக்குறிச்சியைத் தலைநகராகக் கொண்டு இயங்கும் இந்த புதிய மாவட்டத்தின் உருவாக்கமானது தமிழ்நாட்டில் உள்ள மாவட்டங்களின் எண்ணிக்கையை 33 ஆக உயர்த்தியுள்ளது.
- இந்த மாவட்டமானது நான்கு சட்டமன்றத் தொகுதிகளையும் ஒரு நாடாளுமன்றத் தொகுதியையும் கொண்டது.
- இந்த அறிவிப்புக்கு முன்னதாக தமிழ்நாட்டில் கடைசியாக உருவாக்கப்பட்ட புதிய மாவட்டம் திருப்பூர் (2009) ஆகும்.

# தேசியச் செய்திகள்

## CBI தலைவர் பதவிக்கு மீண்டும் அலோக் வர்மா

- இந்திய தலைமை நீதிபதி ரஞ்சன் கோகாயின் ஆணைப்படி உச்ச நீதிமன்ற அமர்வானது, எவ்வித முக்கியமான கொள்கை முடிவெடுக்கும் அதிகாரங்களும் வழங்காமல் CBI அமைப்பின் தலைவராக அலோக் குமார் வர்மாவை மீண்டும் பதவியில் அமர்த்தியுள்ளது.
- இது அவருக்கு எதிராக கொண்டு வரப்பட்ட ஊழல் குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் அவரை முழுமையாக அதிகாரத்திலிருந்து நீக்கி 2018 அக்டோபர் 23 ஆம் தேதி அன்று வழங்கப்பட்ட உத்தரவுக்கு எதிராக வழங்கப்பட்டது.
- இவருக்கு எதிராக உள்ள குற்றச்சாட்டுகளுக்கு மத்திய ஊழல் தடுப்பு ஆணையமானது (CVC – Central Vigilance Commission) வெற்றிகரமாக விசாரணையை நடத்திய பின்னர் CBI தலைவரை நியமனம் செய்யும் உயர் அதிகாரம் கொண்ட குழுவால் அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.
- இந்த உயர் அதிகாரம் கொண்ட குழுவானது பிரதமர், இந்திய தலைமை நீதிபதி மற்றும் மக்களவையின் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோரை உள்ளடக்கியதாகும்.

## பாதுகாப்பு இந்தியா ஸ்டார்ட்-அப் சேலஞ்ச்

- பாதுகாப்பு இந்தியா ஸ்டார்ட்-அப் சேலஞ்ச் என்ற ஒன்று பாதுகாப்பு புத்தாக்க நிறுவனத்தால் துவங்கப்பட்டது.
- இது பாதுகாப்பில் சிறப்புத் தன்மைக்கான புத்தாக்கத்தின் கீழ் புத்தாக்கங்களை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த முன்முயற்சியானது பாதுகாப்பு அமைச்சகத்தின் பாதுகாப்பு தயாரிப்பு துறை, அடல் புத்தாக்க திட்டம் மற்றும் நிதி ஆயோக் ஆகியவற்றின் ஆதரவுடன்

தொடங்கப்பட்டுள்ளது.

## பெட்ரோல் சில்லறை விற்பனை நிலையங்கள் மூலம் FASTag வழங்குதல்

- இந்திய தேசிய நெடுஞ்சாலைத் துறை (NHAI – National Highways Authority India) ஆணையத்தால் ஊக்குவிக்கப்படும் இந்திய தேசிய நெடுஞ்சாலை மேலாண்மை லிமிடெட் (Indian Highways Management Company Ltd-IHMCL) நிறுவனமானது அரசு நடத்தும் எண்ணெய் விற்பனை நிறுவனங்களுடன் (IOCL, BPCL மற்றும் HPCL) புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றில் கையொப்பமிட்டுள்ளது.
- இது இந்தியா முழுவதும் பெட்ரோல் நிலையங்களில் FASTag கிடைப்பதை உறுதி செய்யும்.
- IHMCL ஆனது 2016 ஆம் ஆண்டு ஏப்ரலில் FASTag என்னும் பெயரில் தேசிய மின்னணு சுங்கவரி வசூலிப்புத் திட்டத்தைத் தொடங்கியது.

## தனிநபர் சட்டங்கள் திருத்த மசோதா 2018

- 2018 ஆம் ஆண்டின் தனிநபர் சட்டத் திருத்த மசோதாவிற்கு மக்களவை ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்த மசோதாவானது கீழ்க்காணும் 5 தனிநபர் சட்டங்களில் விவாகரத்து செய்வதற்கு தொழுநோயை ஒரு காரணமாகப் பயன்படுத்துவதை நீக்க முற்படுகிறது. அச்சட்டங்களாவன
  - இந்து திருமணச் சட்டம்
  - இஸ்லாமிய திருமண முறிப்புச் சட்டம்
  - விவாகரத்துச் சட்டம் (கிறிஸ்துவர்)
  - சிறப்பு திருமணச் சட்டம்
  - இந்து தத்தெடுப்பு மற்றும் பராமரிப்புச் சட்டம்

## குடியுரிமை திருத்த மசோதா 2019

- 2019 ஆம் ஆண்டின் குடியுரிமை திருத்த மசோதா 2019 ஜனவரி 08 ஆம் நாள் மக்களவையில் நிறைவேற்றப்பட்டது.
- இந்த மசோதாவானது வங்காள தேசம், ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தானிலிருந்து வந்த இஸ்லாமியர் அல்லாதோருக்கு குடியுரிமை வழங்க முற்படுகிறது.
- இந்த மசோதாவானது 2016 ஆம் ஆண்டில் நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுப் பின்னர் நாடாளுமன்றக் கூட்டுக் குழுவினால் ஆய்வு செய்யப்பட்டது.
- ஆப்கானிஸ்தான், வங்காளதேசம் மற்றும் பாகிஸ்தானில் இருந்து வந்த சிறுபான்மையின சமூகத்தினருக்கு 12 ஆண்டுகளுக்குப் பதிலாக 6 ஆண்டுகளுக்குப் பிறகு எந்தவொரு சரியான ஆவணம் இல்லாவிட்டாலும் இந்தியக் குடியுரிமையை வழங்க இது அனுமதிக்கிறது.

- மேலும் இது, 1971 மார்ச் 25 ஆம் தேதிக்குப் பிறகு இந்தியாவிற்குள் வந்த வெளிநாட்டவர்களை மத பாகுபாடின்றி வெளியேற்றும் 1985ஆம் ஆண்டின் அசாம் ஒப்பந்தத்தை செல்லாததாக்குகிறது.

# பொருளாதாரச் செய்திகள்

## டிஜிட்டல் முறை பண வழங்கீட்டை மேம்படுத்த 5 உறுப்பினர்கள் குழு

- ரிசர்வ் வங்கியானது நாட்டில் பாதுகாப்பான டிஜிட்டல் பண வழங்கீட்டு முறையை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பரிந்துரை செய்வதற்காக 5 உறுப்பினர்களைக் கொண்ட உயர்நிலைக் குழுவை அமைத்துள்ளது.
- இந்த உயர்நிலைக் குழுவானது ஆதாரைக் கட்டமைத்தவரான நந்தன் நிலேகனியின் தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது.
- இந்த முடிவானது பணவழங்கீட்டை டிஜிட்டல் மயமாக்குதல் மற்றும் டிஜிட்டல் மயமாக்குவதன் மூலம் நிதி உள்ளடக்கலை மேம்படுத்துதல் ஆகியவற்றை மேம்படுத்துவதற்காக எடுக்கப்பட்டுள்ளது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச்செய்திகள்

## புதிய கோள் - HD 21749b

- நாசாவின் "வெளிக் கோள்களைச் சுற்றி ஆய்வு செய்யும் செயற்கைக் கோளானது" (TESS -Transiting Exoplanet Survey Satellite) HD21749 எனும் நட்சத்திரத்தைச் சுற்றி வரும் HD21749b எனும் பெயரிடப்பட்ட புதிய கோளைக் கண்டறிந்துள்ளது.
- இந்த கோளானது பூமியிலிருந்து 53 ஒளியாண்டு தொலைவில் உள்ள மங்கலான ரெடிகுலம் எனும் நட்சத்திரக் கூட்டத்தில் அமைந்துள்ளது.
- HD21749b ஆனது நமது சூரியனைப் போல் ஒளி வீசும் சூடான நட்சத்திரமான அதன் மைய நட்சத்திரத்தினை 36 புவி நாட்களுக்கு ஒருமுறை சுற்றி வருகின்றது.
- இது பூமியை விட மூன்று மடங்கு பெரியதும் 23 மடங்கு அதிக நிறையையும் உடையதாகும். அதாவது திண்மமாக அல்லாமல் வாயுக் கோளாக இருக்கும் இது ஒரு துணை நெப்டியூன் கோளாகும்.




# பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## முதல் IMF பெண் தலைமைப் பொருளாதார வல்லுநர்

- மைசூரில் பிறந்தவரான கீதா கோபிநாத் சர்வதேச நாணய நிதியத்தின் 11-வது தலைமைப் பொருளாதார வல்லுநராகப் பொறுப்பேற்றுள்ளார். இதனால் IMF-ன் தலைமைப் பொறுப்பில் பொறுப்பேற்றுள்ள முதல் பெண்ணாக அவர் ஆகியுள்ளார்.
- இவர் 2018 டிசம்பர் 31 அன்று பதவி ஓய்வு பெற்ற மௌரிஸ் அப்ஸ்பெல்ட் (மௌரி) என்பவருக்குப் பதிலாக பதவியேற்றுள்ளார்.
- மேலும் இந்த தலைமைப் பொருளாதார வல்லுநர் நிதி ஆய்வுத் துறையின் இயக்குநராகவும் இருப்பார்.



### உலகளாவிய சூரிய சக்தி குழுமத்தின் முதல் இந்திய தலைவர்

- இந்திய தேசிய சூரிய ஆற்றல் கூட்டமைப்பின் தலைவரான பிரணவ் R மேத்தா உலகளாவிய சூரிய ஒளிக் குழுவின் தலைவராக பொறுப்பேற்றுள்ளார்.
- இவர் இந்தியாவின் சூரிய ஒளி மனிதர் என குறிக்கப்படுகிறார்.
- சமீபத்தில் அபுதாபியில் நடைபெற்ற உலக எதிர்கால ஆற்றல் மாநாட்டின் ஒரு பகுதியாக சோலார் ப்யுச்சர் டுடே என்ற அமைப்பால் இவருக்கு 'Visionary Disruptor Award' என்ற விருது வழங்கப்பட்டது.

## இதரச் செய்திகள்

### கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுகள் - 2வது பதிப்பு

- புனேயில் உள்ள பலேவதி விளையாட்டு அரங்கில் 18 வெவ்வேறு பிரிவுகளில் பல விளையாட்டுக்களை உள்ளடக்கிய கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுகளின் 2-வது பதிப்பை மகாராஷ்டிரா நடத்தவுள்ளது.
- இந்த கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுகள் ஆனது இந்தியாவில் விளையாட்டு மேம்பாட்டிற்காக சீரமைக்கப்பட்ட தேசியத் திட்டமான கேலோ இந்தியாவின் ஒரு பகுதியாகும்.

### கும்ப் ஜியோபோன் செயலி

- ரிலையன்ஸ் ஜியோ தகவல் தொடர்பு நிறுவனமானது கும்ப் ஜியோபோன் என்ற செயலியைத் தொடங்கியுள்ளது.
- இது பிரயாக்ராஜ்ஜில் நடைபெறும் அர்த்த கும்ப மேளாவின் போது கூடும் லட்சக்கணக்கான பக்தர்களுக்காக பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்டது ஆகும்.
- இந்த புதிய செயலியானது பயனர்கள் தங்கள் சுற்றங்கள் மற்றும் நட்புகளின் மிகச் சரியான இருப்பிடத்தைக் கண்டறிவதன் மூலம் தங்கள் சுற்றங்களுக்கு மிக அருகில் பயனர்கள் இருக்க உதவும் கோயா பாயா எனும் சிறப்பம்சங்களைக் கொண்டுள்ளது.

- - - - - - - - - - - - - - -